1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் சாலையினுடைய முக்கியத் துவத்தை உணர்ந்து அதை ஒரு வழிப் பாதையாக, ஒன் லைன் மட்டும், டபுள் லைனுக்கு வந்திருக்கிறது—ஒன் லைன் சாலை யாகப் போடுவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருக் கிறது. ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, கும்பகோணத்தை ஒட்டியிருக்கின்ற அந்தப் பகுதிக்கு சுற்று வழிச் சாலை அமைக்கின்ற அந்தத் திட்டத்தில் இந்த வேலையும் இடம் பெற்றிருக்கிறது. தேசிய விழாவாகக் கொண் டாடப்படுகின்ற 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்ற மகா மகம் திருவிழாவையொட்டி, இந்தச் சுற்றுச் சாலை அமைக்கப் பட இருக்கிறது. எனவே 1990–91 ஆம் நிதி ஆண்டுக்குள் இந்தப் பாலத்தைக் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் ஆய்வு அறிக்கை வரட்டும், பிறகு எந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி அதனுடைய நிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே இது பேருந்து வழித்தடமாக அமைய உள்ள பாலம். எனவே சிங்கில் லைன் என்பதை டபுள் லைனாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதுவும் ஆய்வு அறிக்கை வந்தபிறகு கவனிக்கப்படும்.

மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை பாசனத்திற்கு விடுதல்

*3254 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை நிரந்தரமாக பாசனத்திற்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1990 சனவரி 25

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மேட்டூர் இடது, வலது கரைக்கால்வாய்களுக்கு, மேட்டூர் நீர்த் தேக்கத்தில் இருக்கும் நீர் இருப்பிற்கு ஏற்ப, பாசனத் திற்காக நிரந்தரமாக தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் இடது, வலது கரைக் கால்வாய்ப் பாச னத்திற்கு உட்பட்டு சேலம் மாவட்டத்தில் சுமார் 24 ஆயிரம் ஏக்கர் நிலமும் பெரியார் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசனம் பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் முதலமைச் சரிடத்திலும், பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலும், மா வட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் கோரிக்கை மனு அனுப்பப் பட்ட பிறகுதான் பாசனத்திற்குத் தண்ணீர் விடுகிறார்கள். இந்தநிலையை மாற்றி, உரிய நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரியில் தண்ணீர் தட்டுப்பாடு இன்றி வந்த நேரத்தில் தஞ்சை காவிரி டெல்டா பகுதிக்கு ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறப்போம். ஜூன் மாதம் 12 ஆம் தேதி காவிரி டெல்டாவிற்குத் தண்ணீர் திறந்த பிறகு, சுமார் 50 நாட்களுக்குப் பிறகு, இந்தக் கால்வாய் களுக்குத் தண்ணீர் விடுவது வழக்கம். அதுதான் சட்டம். ஆனால் இப்போது காவிரிக்குத் தண்ணீர் வரத்துக் குறைந்து போய் விட்டது, கர்நாடக அரசு பல அணைகளைக் கட்டிய காரணத்தால். ஆணையிலே குறிப்பிட்டபடி ஜூன் மாதம் 12 ஆம் தேதி காவிரி டெல்டாவிற்கே தண்ணீரை திறக்க முடியவில்லை. இதற்கே கொஞ்சநாள் கழித்துத்தான் திறக் கிறோம். அப்படித் திறக்கிறபோது, இந்தக் கால்வாய்களுக்குத் தண்ணீர் விடுவது கூட சில நேரங்களில் தள்ளிப் போய்விடு கிறதே தவிர, தண்ணீர் விடாமல் இல்லை. 1975 ஆம் ஆண்டு முதல் 1989–90 வரையில் பார்த்தால், நான்கே நான்கு ஆண்டு களிலேதான் தண்ணீர் விட முடியாத சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. அப்போது காவிரியிலே தண்ணீர் இல்லை. மற்றபடி நிரந்தரப் பாசனத்திற்கு, கிட்டத்தட்ட பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களிலே 45 ஆயிரம் ஏக்கர் பாய் கிற அளவிற்குத் தண்ணீரை விட்டுக்கொண்டு இருக் கிறோம்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகளில் தண்ணீர் இருந்தும்கூட, காவிரி ஆற்றிலே தஞ்சைக்குத் தண்ணீர் விடுகிறார்கள். ஆனால் சேலம் மாவட்டத்திலே அணையிருந்தும், சேலம் மாவட்டத் திற்கு உட்பட்ட இடது, வலது கரைப் பகுதிகளில் தண்ணீர்

திறந்துவிடுவதில்லை. இதைக் கருத்தில் கொண்டு, வருகின்ற நடப்பு ஆண்டிலேயாவது' அங்கே உரிய காலத்திலே பயிர் நடவு செய்வதற்கு தண்ணீர் திறந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தண்ணீரை வைத்துக் கொண்டு யாரும் திறக்காமல் இருக்க மாட்டார்கள். அதிலே சில சட்ட திட்டங்கள் உண்டு. இருந்தாலும் விவசாயிகள் வாடுகிற அளவிற்கு இந்த அரசு விட்டுவிடாது.

பைத்தூர் இராமத்தில் ஏரி கட்டுதல்

*3536—திரு. ஏ. எம். இராமசாமி ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் பைத்தூர் கிராமத்தில் புதிய பெரிய ஏரி கட்டுவதற்கு 1976 ஆம் ஆண்டி லிருந்தே ஆய்வில் இருந்து வந்த செயற்குறிப்பு எந்த நிலை யில் உள்ளது?

(9—55 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்த முதல் நிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கை வந்தபிறகு இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் பைத்தூர் கிராமத்தில் புதியதாக இந்த ஏரியைக் கட்டுவதினால் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு நல்ல வசதியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் அப்பகுதியிலே உள்ள கிணற்றை நம்பி வாழ்கின்ற விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்குக் கிணற்றுத் தண்ணீர் வருவதற்கும் வசதியாக இருக்கும். இதை மனதில்கொண்டு வருகின்ற நடப்பாண்டில் இந்த ஏரியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். ஒரு ஆய்வு அறிக்கை